## அரச மரக் கூட்டுத்தாபனம் - 2018

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரச மரக் கூட்டுத்தாபனத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை வெளிப்படுத்தவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கூட்டுத்தாபனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது

நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,
- கூட்டுத்தாபனத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- கூட்டுத்தாபனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 01 ஆம் இலக்க 32 ஆவது பிரிவின் பிரகாரம் வேறு கடன்கொடுத்தோனின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களின் முற்பணங்கள், பணத்திற்கு விற்கப்பட்ட முற்பணங்கள் மற்றும் பண விற்பனைக் | ரூபா 161,776,032 பணத்தொகையில் 2019 சனவரி மாதம் சீர்செய்யப்பட்ட பணம் ரூபா 106,783,829 ஆகும். அப்பணம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் லெஜருக்கு பதியும் போது தவறு ஏற்பட்டதால் அத்தினத்தில் செய்ய முடியாது போனது. மீதிப் பணம் ரூபா | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டுப்பாட்டு ஆகிய 03 கணக்குகளின் மொத்தம் ரூபா 161,776,032 வரவு மீதியை சீர் செய்யப்பட்டிருந்தது. அதன்படி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கடன்கொடுத்தோர் மீதிகளின் உண்மைத்தன்மை காணப்படாமை அவதானிக்கப்பட்டது. | 54,992,203 வை இக்காலப்பகுதிக்குள் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். | |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 ஆம் இலக்க 61 ஆவது பிரிவின் பிரகாரம் சொத்தொன்றிற்காக பாவனைக்குட்படுத்தும் பெறுமானத்தேய்வு முறை குறைந்த பட்சம் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் சொத்து மீளாய்வுக்குட்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் சொத்தின் எதிர்கால பொருளாதார பலனை உபயோகிக்கும் எதிர்பார்ப்புடன் தேவையான மாற்றங்கள் ஏற்படுமாக இருந்தால் அந்த மாற்றங்களின் வடிவம் வெளிப்படுத்தும் வகையில் பெறுமானத்தேய்வு முறை மாற்றப்பட வேண்டும். அப்படியான மாற்றம் கணக்கீட்டு மதிப்பீட்டுக்கான மாற்றமாக இலங்கை கணக்கீட்டு நியமம் 08 ஆம் இலக்கம் பிரகாரம் கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்தால் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கும் படியான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு கொள்கை மற்றும் சதவீதம் தீர்மானிக்கப்படுவது, விசேட நிபுணத்துவமுள்ளவரின் அபிப்பிராயம் மற்றும் சொத்தின் பயன்தரக்கூடிய ஆயுட்காலம் என்பவற்றின் அடிப்படையிலேயேயாகும். பொருளாளரின் செயலாளரினால் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வெளியிடப்பட்ட சொத்துக்களின் முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 2018/04 இன் படி மற்றும் கொம்ப்ட்ரோலர் நாயகத்தின் காரியாலயத்தினால் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வெளியிடப்பட்ட நிதி அல்லாத சொத்துக்களை மதிப்பிடுதல் வழிகாட்டலின் படி 2019 ஆம் வருடத்தின் கூட்டுத்தாபனத்தினுடைய அனைத்து சொத்துக்களையும் மீண்டும் மதிப்பிடுவதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த காரியாலயங்கள் நிறைவடைந்த பின்னர் பெறுமானத்தேய்வு முறை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்த்திருப்பதாக அறியத்தருகின்றேன். | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 ஆம் இலக்க 79 ஆவது பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை பரிசோதிப்பவரின் தேவைக்கு ஏற்ப பின்வரும் தகவல்கள் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | தற்காலிகமாக செயலற்ற சொத்துக்கள், இயந்திர தொகுதி மற்றும் உபகரணங்களின் பாவனை மதிப்பீடு | பொருளாளரின் செயலாளரினால் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வெளியிடப்பட்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இல 2018/04 இன் படி மற்றும் கொம்பட்ரோலர் நாயகத்தின் காரியாலயத்தினால் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வெளியிடப்பட்ட நிதி அல்லாத சொத்துக்களை மதிப்பிடுதல் வழிகாட்டலின் படி 2019 ஆம் ஆண்டின் கூட்டுத்தாபனத்தினுடைய அனைத்து சொத்துக்களையும் மீண்டும் மதிப்பிடுவதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்த காரியங்கள் நிறைவடைந்ததன் பின்னர் தற்காலிகமாக செயலிழந்துள்ள சொத்துக்களை அழிப்பதற்கோ அல்லது திருத்தங்களை மேற்கொண்டு பாவனைக்குட்படுத்த முடியுமாக இருந்தால் மீள மதிப்பீடு செய்வதற்கு இனிவரும் காலங்களில் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்வதாக அறியத்தருகின்றேன். | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | இலங்கை கணக்கீட்டு நியமம் 05 ஆம் இலக்கத்தின் பிரகாரம் பயன்படுத்தும் நிலையிலிருந்து ஓய்வளிக்கப்பட்டுள்ள மற்றும் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள பெறுமானத்தேய்வு முறைப்படுத்தப்படாத சொத்துக்கள், இயந்திரங்கள் தொகுதி மற்றும் உபகரணங்களின் பாவனை மதிப்பீடு | வருடத்திற்குள் அழிக்கப்படவேண்டிய சொத்துக்களை அடையாளம் கண்டு அந்த வருடத்திற்குள் அழிக்கப்பட வேண்டும். அப்படி அழிக்கப்பட வேண்டிய சொத்துக்கள் சம்பந்தமாக சொத்துக்கள், இயந்திர தொகுதி மற்றும் உபகரணங்கள் சம்பந்தமாக குறிப்பு இலக்கம் 08 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (iii) | கிரயப் படிவத்தை பாவனைக்குட்படுத்தும் போது சொத்துக்கள் இயந்திர தொகுதி மற்றும் உபகரணங்களின் சாதாரண பெறுமதி பாவனை மதிப்பீடு போதிய அளவு மாற்றங்களுக்கு | கூட்டுத்தாபனத்திற்குரிய முழுமையான தேய்வுக்குட்பட்ட சொத்துக்கள் இயந்திர தொகுதி மற்றும் உபகரணங்களின் பாவனை மதிப்பீடு குறிப்பு இலக்கம் 08 இனால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பொருளாளரின் செயலாளரினால் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வெளியிடப்பட்ட சொத்துக்கள் | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | |
|---|---|
| உட்படும் போது சாதாரண பெறுமதி | முகாமைத்துவ சுற்றறிக்கை இல 2018/04 இன் படி மற்றும் கொம்ட்ரோலர் நாயகத்தின் காரியாலயத்தினால் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வெளியிடப்பட்ட நிதி அல்லாத சொத்துக்களை மதிப்பிடுதல் வழிகாட்டலின் படி 2019 ஆம் ஆண்டின் கூட்டுத்தாபனத்தினுடைய அனைத்து சொத்துக்களையும் மீண்டும் மதிப்பிடுவதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதன்படி இதன்பின்னர் இந்த சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்து பாவனை மதிப்பீட்டில் போதியளவு மாற்றங்களுக்கு உட்படும்போது சாதாரண பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென அறியத்தருகின்றேன். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கல்தெமுள்ள அட்டிமடுவையில் பொருத்தப்பட்ட தரமற்ற இரும்பு சட்டத்தை மீண்டும் சரிசெய்வதற்கான அடையாளம் காணப்பட்ட நட்டத்தின் பெறுமதி ரூபா 834,124 கல்தெமுள்ள வீட்டு உபகரண தொகுதியை அரைவாசி முடிவடைந்த கட்டிடமாக கணக்கிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது. | இது சம்பந்தமாக தேடிப்பார்ப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டதோடு, அந்த குழுவினால் நட்டம் ரூபா 340,932 என அடையாளம் காணப்பட்டது. அதன்படி அந்தப்பணம் 2019 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்திலிருந்து உரிய அதிகாரிகளிடமிருந்து அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சரியாக கணக்கிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| அரைவாசி முடிவடைந்த கட்டிடமாக காட்டப்பட்டுள்ள கெப்பெட்டிபொல | 2,035,694 | கோவைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | 2011 ஆம் ஆண்டில் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும், தேவையான தகவல்களை பெற்றுக் | கூட்டுத்தாபனத்தின் நிர்மாண பணிக்கு உரிய தகவல்கள் பொறியியலாளர் பிரிவினால் |

| | | |
|---|---|---|
| தொகுதியிலே இரட்டை உத்தியோகபூர்வ இல்லங்களை நிர்மாணித்தல். | கொள்வதற்காக கெப்பெட்டிபொல பிரதேசத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த தகவல்கள் கிடைத்தவுடன் உடனடியாக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக அறியத்தருகின்றேன். | நாளதுவரையாக பேணப்பட்டிருக்க வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வேலைத்தளங்களுக்காக ஒதுக்கப்பட்ட முற்பணங்களிலிருந்து 2013 முதல் 2017 வரையான காலத்திற்குள் வழங்கப்பட்டுள்ள ரூபா 10,833,500 மற்றும் 2013 ஆம் ஆண்டிற்கு முன்னர் வழங்கப்பட்டுள்ள ரூபா 1,142,000 2019 ஏப்ரல் ஆகியும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் தீர்க்கப்படாத முற்பணங்கள் சம்பந்தமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 1983 ஆம் ஆண்டிலிருந்து தனியார் கம்பனி ஒன்றிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 11,871,954 அரச மற்றும் அரை அரச நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 207,910,689 தனியார் நிறுவனமொன்றிலிருந்து ரூபா 1,687,042 மற்றும் இரண்டு நபர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 777,353 பணம் 04 வருடங்களுக்கு அதிகமான காலம் கடந்திருந்தும் அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | அரச நிறுவனங்களிடமிருந்து பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கு தாமதம் ஏற்படுவது இதற்கு காரணமாக இருந்ததுடன் தனிப்பட்ட கொடுக்கல் வாங்கல் நபர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தை விற்பனை பிரிவினால் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல். | கடன்பட்டோர் மீதி தீர்வு செய்வதற்கு சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மஹாவெலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் மற்றும் வன பாதுகாப்பு திணைக்களத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய மின்சாரம், நீர்க் கட்டணம் மற்றும் கட்டிட வாடகை முறையே ரூபா 1,661,487 மற்றும் ரூபா 31,333,241 பணம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | மஹாவெலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் மற்றும் வனபாதுகாப்பு திணைக்களத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய மேற்கூறிய பணத்தின் கட்டிட வாடகை வன பாதுகாப்பு திணைக்களத்தினால் 2014 ஆம் ஆண்டிலிருந்து கட்டணங்கள் செலுத்தப்பட்டிருக்கவில்லை. நீர், மின்சார கட்டணங்கள் உரிய முறையில் செலுத்தப்பட்டு வந்ததுடன் 2018 இறுதி மாதங்களின் பணம் 2019 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தது. | அறவிடப்பட வேண்டியுள்ள கட்டணங்கள் மற்றும் வாடகைகளை அவசரமாக அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதாக |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் ஆகியவற்றிற்கு இணங்காமைகள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 571(2) | 2 வருடங்கள் கடந்த கென்நேயில் வைப்பு ரூபா 1,258,635 வும் 2 வருடத்திலிருந்து 5 வருடங்கள் வரையான காலம் கடந்த பின்னர் ஆரம்பிக்கப்பட்ட வைப்பு ரூபா 133,800 வும் ஒப்பந்த பிடிப்பாக ரூபா 2,513,001 வும் மற்றும் டென்டர் வைப்பு ரூபா 7,783,104 வையும் தீர்வு செய்வதற்கு அல்லது நிதிப்பிரமாணம் 571(2) இன் பிரகாரம் வருமானத்திற்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | நுவரெலியா வெபல்டன் தோட்டத்தின் வைப்புக்காக சட்ட நடவடிக்கைகள் காணப்படுவதனால் இதுவரை விடுவிக்க முடியாதிருப்பதுடன் நீண்ட காலமாக காணப்படுகின்ற மீதியான வைப்பை கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்காள்ளப்பட வேண்டும் என்பதாக |
| (ஆ) | 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்கமுடைய நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டம் | 2017 நவம்பர் 15 ஆந் திகதி அனுராதபுர பிரதேச காரியாலயம் நிர்மாணிப்பு ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் இதற்கு உரிய திட்டத்தினை நகர அபிவிருத்தி அதிகாரத்தின் ஊடான அனுமதியை 2018 திசெம்பர் 03 ஆந் திகதியிலும் பெற்றிருக்கவில்லை. | அனுராதபுர பிரதேச காரியாலயம் கட்டிடத்தின் அனுமதிக்கான உரிய ஆவணங்கள் அனுராதபுர பிரதேசத்திற்கு 2017 ஏப்ரல் 19 ம் திகதி அனுப்பப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அதற்காக அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. | சட்டத்தின் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் பூரண அனுமதியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதாகும். |

## 1.8 வரி பிரமாணங்களுக்கு இணங்காமைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செலுத்த வேண்டிய தேசிய கட்டியெழுப்பும் வரி மற்றும் ஒன்றிணைந்த வரி மீதிகள் நிதிக்கூற்றுக்களின் படி ரூபா 59,871,133 ஆக இருந்ததுடன் உரிய வரி அறிக்கையின் படி ரூபா 63,841,605 ஆக இருந்ததால் ரூபா 3,970,472 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | இந்த வேறுபாட்டுக்கு காரணம் எங்களால் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதற்கு முன்னர் 2018 ஆம் ஆண்டில் உரிய அனைத்து வரி 2019 சனவரி 20 ஆந் திகதியாகும் போது செலுத்தப்பட்டிருந்தது. அதேபோல் மாதாந்த வரி அறிக்கையில் விற்பனைக்கும் மற்றும் லெஜரின் விற்பனைக்கும் இடையில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும் போது லெஜரில் சுட்டிக்காட்டப்படுகின்ற விற்பனை பெறுமதிக்கும் மற்றும் மாதாந்த அறிக்கையில் சிறு வேறுபாடு ஏற்பட முடியும். எப்படியிருந்தாலும் எங்களால் VAT மற்றும் NBT வரி பணமாக 2018 ஆம் ஆண்டில் நிதிக்கூற்றில் குறிப்பிடப்பட்ட ரூபா 4,152 மில்லியன் முழுமையான விற்பனை பணத்திற்காக பூரணமாக VAT மற்றும் NBT வரி செலுத்தப்பட்டிருந்தது என்பதை தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். இதன்படி VAT வரி அறிக்கையில் ரூபா 4,152 மில்லியனுக்காக VAT வரி செலுத்தப்பட்டிருந்ததுடன் NBT வரி அறிக்கையில் ரூபா 4,152 மில்லியனுக்காக NBT வரிப்பணம் செலுத்தப்பட்டிருந்தது. | குறித்த வருடத்திற்குரிய வரி அந்த வருடத்தின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டு சரியாக கணக்கு கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும் என்பதாக |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 672,432,854 இலாபமாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய வருடத்தின் இலாபம் ரூபா 966,804,360 ஆக காணப்பட்டது. அதன்படி நிதி விளைவுகளிலே ரூபா 294,371,506 வீழ்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு செயற்பாட்டு வருமானம் 30 சதவீதம் கீழ் இறங்கியிருந்தது பிரதான காரணமாக காணப்பட்டது.

கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கிடையே விவசாய உற்பத்தி பிரம்பு இறக்குமதி ஆகிய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை என்பதுடன் எதிர்பார்க்கப்பட்ட ளவு மரத்துளை பொருள் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனைகள் இடம்பெற்றிருக்கவில்லை. மீளாய்வாண்டிலே புகையிரத பாதை பலகை ஏற்றுமதி இடம்பெற்றிருக்கவில்லை. அத்துடன் பலகை தொடர்பான முடிவடைந்த மற்றும் அரைவாசிக்கு முடிக்கப்பட்ட பொருட்கள் ஏற்றுமதி செய்தல் கூட்டுத்தாபனத்தின் நோக்கமாக இருந்தாலும் அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக கூட்டுத்தாபனம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களுக்கான பகுப்பாய்வு

கூட்டுத்தாபனத்தின் வரிக்கு முன்னைய இலாபம் முன்னைய ஆண்டிற்கு நிகராக ரூபா 294,371,506 வால் குறைந்திருந்ததுடன் அது 30.4 சதவீத பின்னடைவாகும். இதற்காக விற்பனை வருமானம் ரூபா 184,754,000 வால் அல்லது 4.3 சதவீதத்தால் வீழ்ச்சியும், வேறு வருமானங்களின் கீழ் செயற்பாட்டு வருமானம் ரூபா 29,964,339 வால் அல்லது 29 சதவீதத்தால் வீழ்ச்சியும் முக்கியமான பாதிப்பாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டதுள்ளது.

## 2.3 விகித பகுப்பாய்வு

மீளாய்வாண்டிலே திரவத்தன்மையிலான விகிதாசாரத்தை கவனத்திற்கொள்ளும் போது நடைமுறை விகிதாசாரம் 1:4.33 ஆகவும் மற்றும் உடனடி விகிதாசாரம் 1:2.78 மேல் கணிப்பு பெற்றிருப்பதுடன் கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமைகள் மிக நல்ல நிலையில் காணப்பட்டது. இருப்பினும் தொகை இருப்பு விகிதாசாரம் முன்னைய வருடத்திற்கு நிகராக 1.81 இலிருந்து 1.25 வரையான குறைவு காணப்படுவதாகவும் விற்பனை வருமானம் குறைகின்ற நிலைமை காணப்படுவதாக கணக்காய்வின் போத அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 ஒப்பந்த நிர்வாக குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அனுராதபுர அரச மரக்கூட்டுத்தாபன பிரதேச காரியாலய கட்டிட மற்றும் உத்தியோகபூர்வ இல்லம் நிர்மாணிப்பின் போது ஒப்பந்தத்தின் படி 2018 மார்ச் 21 ஆந் திகதி முடிவடைந்திருக்க வேண்டுமெனினும் அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. 2018 ஆகஸ்ட் 25 ஆந் திகதி வரை காலம் நீடிக்கப்பட்டிருந்தாலும் 2018 திசெம்பர் 03 ஆந் திகதியாகியும் நிர்மாணப் பணிகள் முடிவடைந்திருக்கவில்லை. அதன்படி 2018 ஆகஸ்ட் 25 ஆந் திகதிக்கு பின்னர் ஒரு நாளைக்கு ரூபா 15,000 படி ரூபா 1,500,000 தாமத தண்டப்பணம் அறவிடப்பட வேண்டுமெனினும் அந்தப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. குறித்த காலத்திற்குள் முடிக்கப்படாததன் காரணமாக காரியாலய வரி வாடகையாக ரூபா 375,000 செலவிடுவதற்கு நேரிட்டிருந்தது. செயல்திறன் பிணை (Peeformance Bond) மற்றும் காப்புறுதி காப்பீட்டுக் காலத்தை நீடிப்பதற்கு ஒப்பந்தக்காரரினால் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | இந்த ஒப்பந்தம் 2018 ஆகஸ்ட் 25 ஆந் திகதிக்கு வேலை முடிக்கப்பட்டதாக ஒப்பந்த கம்பனியினால் அறிவிக்கப்பட்டது. அந்த திகதிக்கு பின்னர் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட கதவு, யன்னல்களின் பொலிஷ் பூசுதல் மற்றும் பொருத்துதல் வேலைகள் மேலும் குறிப்பிடுகின்றேன். | ஒப்பந்த காலத்தின்படி நிர்மாணப் பணிகள் மற்றும் ஒப்பந்தத்தை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளலின் ஊடாக ரீதியிலான நட்டத்தை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2017 செப்தெம்பர் 13 ஆந் திகதி நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட பதியதலாவை சாலை உத்தியோகத்தர் காரியாலய நிர்மாணப் பணிகள் நடவடிக்கை 2018 திசெம்பர் 31 ஆந் திகதியாகும் போது முடிவடைந்திருக்கவில்லை. | பதியதலாவை களங்சியசாலை உத்தியோகத்தர் காரியாலயத்தின் கிரயம் ரூபா 1,976,336 நிலையான கட்டிடமாக மூலதனமாக்கப்பட வேண்டுமெனினும், இடம்பெற்ற தாமத குறைபாட்டினால் அரைவாசி முடிவடைந்ததாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. இதை 2019 ஆம் ஆண்டில் சரிசெய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக அறியத்தருகின்றேன். | குறிப்பிட்ட காலத்திற்குள் நிர்மாணித்தல் மற்றும் ஒப்பந்த வேலை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதாக |